## தெற்காசிய சுற்றாடல் அமைச்சர்களின் கூட்டம் COP27 :

## எல்லை தாண்டிய மாசடைவதைக் குறைப்பதில் அதிக ஒத்துழைப்பை வழங்குமாறு சார்க் நாடுகளுக்கு சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் அழைப்பு விடுத்துள்ளார்.

"சூழல் சீரழிவு போன்ற தெற்காசியாவில் உள்ள முக்கிய பிரச்சினைகளாவன, பிராந்தியத்தில் உள்ள நாடுகளிடையே அரசியல் அவநம்பிக்கையின் ஒரு பகுதியாக மோசமடைந்துள்ளன. சார்க் அரசியல் செயல்முறை ஸ்தம்பிதமடைந்துள்ள நேரத்தில், தெற்கில் தொடர்ந்து நிலவும் சில சூழல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் தணிப்பதற்கும் செயல்படக்கூடிய மிகவும் திறமையான மற்றும் முற்போக்கான ஒத்துழைப்பு வழிகளை உருவாக்க புதிய மற்றும் மாற்றுத் தளங்கள் ஆராயப்பட வேண்டும்.” நவம்பர் மாதம் 07 முதல் 18 ஆம் திகதி வரை எகிப்தில் உள்ள ஷார்ம் எல் ஷேக் நகரில் நடைபெற்ற COP27 உச்சிமாநாட்டின் ஒரு அம்சமாக இடம்பெற்ற தெற்காசிய நாடுகளின் சுற்றாடல் அமைச்சர்களின் கூட்டத்தில் உரையாற்றிய போது சுற்றூடல அமைச்சர் நசீர் அஹமட் இந்த கருத்துக்களை வெளிப்படுத்தினார்.

அமைச்சர் அஹமட் மேலும் கூறுகையில், “சுற்றாடல்சார் ஒத்துழைப்பிற்கு எமது உச்சளவான அர்ப்பணிப்பை செய்வோம். அத்துடன், தாமதமாகிவிட முன்னர் கீழ் மட்ட யதார்த்தங்களை மாற்றுவதற்கு முயற்சிப்போம். பிராந்தியத்தில் காலநிலைப் பேரழிவுகள் எங்கு நிகழ்ந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் ஒரே குரலையும் பரஸ்பர உணர்வையும் வளர்ப்போம். சுற்றாடல் பேரழிவுகளைத் தணித்தல் மற்றும் மாற்றியமைத்தல் பற்றிய நமது அறிவையும் சிறந்த நடைமுறைகளையும் பகிர்ந்து கொள்வோம்” என்று குறிப்பிட்டார்.

சுற்றாடல், வனவியல் மற்றும் காலநிலை விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளின் பங்கேட்புடன் “தெற்காசியா ஒரே குரல்” என்ற தொனிப்பொருளின் கீழ் கொழும்பில் அமைந்துள்ள தெற்காசிய கூட்டுறவு சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் (SACEP) இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

இலங்கையின் தனித்துவமான சூழல் மற்றும் காலநிலை தொடர்புகளை விபரித்த அமைச்சர் அஹமட், இலங்கையின் அத்தியாவசியமான எல்லைகளுக்கு அப்பாற்பட்ட தன்மை காரணமாக சுற்றாடல் மாசடைதல் மற்றும் நெருக்கடியைத் தனியாக தீர்க்க முடியாது என்று கூறினார்.

- அண்டை நாடுகளின் உமிழ்வுகளால் இலங்கையின் வளி மாசுபடுவதால் காற்றின் தரம் குறைகின்றது.
- கடல்சார் சூழல் மற்றும் பவளப்பாறைகளை அழிக்கும் வகையிலான பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் கடல் குப்பைகளின் எல்லை தாண்டிய செயற்பாடுகளின் அதிகரிப்பை நாடு எதிர்கொள்கிறது.
- சட்டவிரோதமாக மீன்களை வேட்டையாடுவதானது, மீன்களின் எண்ணிக்கை, பல்லினதன்மை மற்றும் வாழ்விடங்களை அழிக்கின்றது.
- எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலினால் ஏற்பட்ட கடல்சார் பேரழிவு போன்ற பேரழிவுகளால் ஏற்படும் சுற்றாடல் மாசடைவு எதிர்காலத்தில் புதிய பிராந்திய ஒழுங்குறுத்தல் கட்டமைப்புகளால் தடுக்கப்பட வேண்டும். இவ்வாறான சூழமைவில், இலங்கை எதிர்கொள்ளும் சுற்றாடல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, குறிப்பாக எல்லை தாண்டிய சுற்றாடல் பிரச்சினைகளைச் கையால்வதற்கு, தெற்காசிய நாடுகளை மேலும் பிராந்திய அணுகுமுறையை நோக்கிப் பயணிக்க முன்வருமாறு SACEP இற்கு அமைச்சர் அஹமட் அழைப்பு விடுத்தார். அவர் SACEP இற்கு பரிசீலிக்குமாறு கோரிக்கை விடுத்தார்.
- தெற்காசிய பிராந்தியத்தில் எல்லை தாண்டிய வளி மாசடைவு தொடர்பான சட்டரீதியான கட்டுப்படுத்தும் கருவிகள்
- பிளாஸ்டிக் மாசடைவு மற்றும் கடல்சார் குப்பைகளை சட்டப்பூர்வமாக கட்டுப்படுத்தும் கருவிகள்
- தெற்காசிய பிராந்தியத்தில் கடல் வளங்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் இந்து சமுத்திரத்தில் லில் ஒழுங்குறுத்துதலுக்கான பிராந்திய கட்டமைப்புக்களை உருவாக்குதல்.
- பிராந்திய கூட்டுத் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வடிவமைத்தல்.
- ஏனைய பிராந்திய/உலகளாவிய முகவர் நிறுவனங்கள் மற்றும் SACEP உறுப்பு நாடுகளுடன் பிராந்திய ஒத்துழைப்பு சுற்றாடல் திட்டங்களை உருவாக்குதல்.
- பருவநிலை மாற்றம், உயிரியல் பல்லினத்தன்மை, நில மறுசீரமைப்பு மற்றும் கடல்சார் துறை போன்ற சுற்றாடல்

துறைகளில் வடக்கு-தெற்கு, தெற்கு-தெற்கு மற்றும் முக்கோண ஒத்துழைப்பை வலுவூட்டல்.

SACEP இன் ஏனைய உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளான பாகிஸ்தானின் காலநிலை மாற்ற அமைச்சரும், செனட் உறுப்பினருமான திருமதி ஷெர்ரி ரெஹ்மான், நேபாளத்தின் மகளிர், சிறுவர் மற்றும் மூத்த பிரசைகள் அமைச்சர் மாண்புமிகு உமா ரெக்மி, வங்களாதேசத்தின் சுற்றாடல் அமைச்சர் எம்.டி. ஷஹாப் உத்தீன், வங்காளதேசத்தின் பிரதி அமைச்சர், டாக்டர். ஃபர்ஹினா அகமது, வங்காளதேச சுற்றாடல், வனங்கள் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சின் செயலாளர், டாக்டர். பெம் நாராயண் கெண்டல், நேபாளத்தின் சுற்றாடல் செயலாளர், திரு. சோனம், பூட்டான் பிரதிநிதி, திரு. நித்தேஷ் குமார், இந்தியா மற்றும் மாலத்தீவு பிரதிநிதிகள், UNFCCC இன் பணிப்பாளர் திரு டொனால்ட் கூப்பர் மற்றும் வேறு சிறப்பு விருந்தினர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.




சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் (நடுவில்) ஏனைய தெற்காசிய நாடுகளின் அமைச்சர்கள் பிரதிநிதிகளுடன்.

தெற்காசிய ஒத்துழைப்பு சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம் (SACEP) என்பது, 1982 ஆம் ஆண்டு தெற்காசிய நாடுகளினால் பிராந்தியத்தில் சுற்றாடல் பாதுகாப்பு, முகாமைத்துவம் மற்றும் மேம்பாட்டுக்காக நிறுவப்பட்ட ஒரு அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும். SACEP உறுப்பு நாடுகளாக ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலத்தீவுகள், நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகியன காணப்படுகின்றன.